Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Worship Traditions of the Piramalai Kallars in Tamil Culture

**A. Moorthiraja,** Research Scholar of History,
Madurai Kamaraj University Madurai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-9889-6591
**DOI: 10.5281/zenodo.6622557**

## Abstract

*The traces of the Piramalai Kallars community in the ancient Tamils have been traced back to ancient literature and still have their valuable contribution to the Tamil society. The life events that show their own life are embodied with social customs and values. These people believed that the Gods had the power to save mankind from disease. The special deities are worshiped by the people of the community together and receive divine blessings. Due to this, when the Piramalai Kallars worships their deities, they decide on the rituals to be performed for the deities and choose the priests starting from the devotion to sacrifice. The article then goes on to describe the honor bestowed on the people of the community who worship (sacrifice) and gather together to pray the deities.*

**Keywords:** Kallar Social Culture, Worship Traditions.

## References

[1] R.Sundra Vanthiyadevan. *Praimalaikallar Valum Varalarum*. Santhiya Publication, Chennai-600083, 2017.
[2] K.K.Pillai.*Tamilnadu History People Culture*, World Tamil Research Centre, Chennai – 600113, 2018.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

**செங்காந்தள்**

*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்*



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# தமிழர் பண்பாட்டில் பிரமலைக்கள்ளர் வழிபாட்டு மரபுகள்

**அ. மூர்த்திராஜா**, வரலாற்றுத்துறை, முனைவர்பட்ட ஆய்வாளர்,

மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, தமிழ்நாடு, இந்தியா.

ORCiD: https://orcid.org/0000-0002-9889-6591

**DOI: 10.5281/zenodo.6622557**

**ஆய்வுச்சுருக்கம்**

*பழந்தமிழர்களில் பிரமலைக் கள்ளர் என்னும் சமூகத்தின் சுவடுகள் பண்டைய இலக்கியங்கள் தொட்டு இன்றைய மதிப்புறு சமூகமாக வளர்ந்துள்ளது. அவர்கள்தம் வாழ்க்கை முறைகளில் தொடர்ந்து பின்பற்றக்கூடிய நிகழ்வுகள் சமூக விழுமியங்களாகத் திகழ்கின்றன. இச்சமூக மக்கள், மனித இனத்தை நோய் நொடிகளிலிருந்து காத்தருளும் சக்தியுடையது தெய்வங்களே என நம்பிக்கை வைத்துள்ளனர். இத்தகு சிறப்பு மிக்க தங்களது தெய்வங்களை சமூக மக்கள் ஒன்று சேர்ந்து வழிபாடு நடத்தி தெய்வ அருள் பெருகின்றனர். இதன் காரணமாக பிரமலைக்கள்ளர் சமூகத்தினர் தம் தெய்வங்களை வழிபடும்போது, அத்தெய்வங்களுக்கு பூஜைமுறைகள் எம்முறையில் நடத்த வேண்டும் எனத் தீர்மானித்து, முறையாகத் தொடங்கி பூசாரிகளைத் தேர்வு செய்கின்றனர். அதன் பின்னர் அவர்கள் வழிபாடு (பலியிட்டு) நடத்தி சமூக மக்கள் ஒன்று கூடி இறையருள் பெறும் மாண்பினை கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.*

**திறவுச்சொற்கள்:** கள்ளர் சமூகப்பண்பாடு, வழிப்பாடு, மரபுகள்.

## முன்னுரை

தமிழ்ச் சமூகத்தின் தொன்மையான சமய மரபுகளையும் வழிபாடுகளையும் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் பிறமலைக் கள்ளர்களது வழிபாட்டு மரபுகளின் மூலமாகவே புரிந்துகொள்ள இயலும். ஏனெனில் தமிழ்ச்சமூகத்தின் பூர்விக வழிபாட்டுச் சமய மரபுகளான இயற்கை வழிபாடு, முன்னோர் வழிபாடு, தெய்வ வழிபாடு, சண்டையில் இறந்துபோன வீரர்களை வழிபடுகின்ற நடுகல் வழிபாடு போன்றவையே இன்றும் இவர்களது அடிப்படை வழிபாட்டு மரபுகளாக உள்ளன. இவர்களது தெய்வங்கள் அனைத்தும் மேற்கூறிய நான்கு நிலைகளிலேயே அமைந்திருக்கின்றன. அவற்றைப் பல தெய்வ வடிவங்களில் வைத்து வழிபடுகின்றனர். குலதெய்வங்கள், காவல் தெய்வங்கள், ஊர்ப்பொது தெய்வங்கள் நடுகல் தெய்வங்கள் என்பன இவற்றின் வழிபாட்டு முறைகள் விளக்கப்படுகிறது.

## குலதெய்வ வழிபாடு

ஒரு இனத்தின் உட்பிரிவு தான் குலம். ஒரு பொது மூதாதையர்கள் வழியில் வந்த ஒரு குடும்பம். பல குடும்பங்களாகப் பல பெருகும் பொழுது அவை உறவு வழியில் இணைந்து ஒரு குலம் ஆகிறது. குலத்தின் தெய்வம் குலதெய்வமாகும். முதலில் அங்கு குடும்ப தெய்வங்களாக இருந்து அக்குடும்பங்கள் ஒரு குலம். ஒரே குலதெய்வங்களை வணங்குபவர்கள் ஒரே பங்காளிகளாகவும் கருதப்படுகின்றனர். இக்குலதெய்வங்களை வணங்குவதன் மூலம் தங்கள் குலம் பல்கிப் பெருகுவதாக நம்புகின்றனர். பெரும்பாலும் முகம் தெரியாத முன்னோர்களும், அவர்களால் இடப்பட்ட சக்திகளுமே குலதெய்வ வடிவங்களைப் பெறுகின்றன. அவ்வகையில் பிறமலைக் கள்ளர்கள் பலவகை ஆண் தெய்வங்களையும்,

பெண் தெய்வங்களையும் தங்கள் குல தெய்வங்களாக வணங்குகின்றனர். தழுவநாதன், பொன்னாங்கன், கடசாரி நல்ல குரும்பன், புன்னூர் ஐயனார், பூங்கொடி அய்யனார். ஊர்க்காளை அய்யனார், மயானக் கருப்பு, தென்கரைக் கருப்பு சோனைக் கருப்பு, பெத்தனசாமி, ஆதிசிவன், பெருமாள், மலைராமன், மட்டைக்கருப்பு, வாலகுருநாதன், குருநாதன், மாயன், வீரபுத்திர பதினெட்டாம் படிக் கருப்பு போன்ற ஆண் தெய்வங்களையும் பேச்சியம்மன், ஒச்சாண்டம்மன், சுந்தரவள்ளியம்மன், காத்தாண்டீஸ்வரி, அங்காளம்மன், சின்னக்கா அம்மன், காமாட்சியம்மன், கண்ணாத்தாள், ஆண்டாள், நல்லதங்காள் போன்றபெண் தெய்வங்களையும் குல தெய்வங்களாக வணங்குகின்றனர். இதில் எல்லாத் தெய்வங்களைப் பற்றி விரிவாகக் காண இயலாததாகையால் உதாரணத்திற்கு சில தெய்வங்களின் வரலாறு அதன் வழிபாட்டு முறைகள் தான்.

**வழிபாட்டில் பெரிய தேவர் தேர்வுமுறை**

ஒவ்வொரு கோயிலிலும் எத்தனை வம்சாவளிகள் இடம்பெற்றுள்ளனவோ அவை ஒவ்வொன்றிலிருந்தும் ஒருவர் தேவராக பொறுப்பு வகிக்கிறார். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட தேவர்களில் ஒருவர் பெரிய தேவராகப் பொறுப்பு வகிக்கிறார். இத்தேவர்கள் ஒவ்வொரு குலதெய்வக் கோயிலுக்கும் அவர்களுக்கே உரிய பூர்வீக வழக்கப்படி தேர்வு செய்யப்படுகின்றனர். இத்தேவர்களே கோயில் நிர்வாகத்தின் தலைவகர்களாகக் கருதப்படுகின்றனர். கோயிலுக்குரிய வரவு செலவுக் கணக்குகளையும் பிரச்சினைகளையும் இவர்கள் தலைமையிலேயே பொதுச்சனங்கள் கூடி விவாதிக்கும். “தேவர் பொறுப்பிற்கு வருபவர் கட்டாயம் திருமணம் ஆனவராக இருக்க வேண்டும். மேலும் மனைவியையிழந்தவராகவோ, மனைவியை மணவிலக்குதச் செய்வதராகவோ இருக்கக்கூடாது. ஒருமுறை தேவராகத் தேர்வு செய்யப்பட்டவர் தன் ஆயுள்காலம் முடியும்வரை அப்பொறுப்பில் இருப்பார். அவர் இறந்த பின்பே மற்றவருக்கு அப்பொறுப்புச் செல்லும். தேவராகப் பொறுப்பு வகித்தவர் இறந்தபின்பு, அக்கோயிலுக்குரிய பூசாரிகள். கோடாங்கித் தேவரைத் தேர்வு செய்வர். இத்தேவர் பொறுப்பு அக்கோயிலுக்குரிய பங்காளிகளுக்குள் சுழற்சி முறையில் செல்வதாகும். அந்த முறைக்குரிய பங்காளிகளில் ஒருவரே தேவராகத் தேர்வு செய்யப்படுவார். அப்பொழுது எல்லோரும் ஒன்று கூடி கொட்டடித்து, சாமி இறக்கி, மாயன் கோடாங்கி அப்பங்காளில் ஒருவரைத் தேவராகத் தேர்வு செய்வார்”. இவ்வாய்வு குல தெய்வ வழிபாடுகளில் முதன்மையாக அமைகிறது. ஆறுகால பூஜை முறைகளோடு கடவுளை வழிபடுவது பெருந்தெய்வ வழிபாடு. வாழ்க்கை முறைகளோடு பின்னிப்பிணைந்த பண்புகளால் வழிபடுவது சிறு தெய்வ வழிபாடு. அவற்றில் குலதெய்வ வழிபாடும் ஆகும்.

**கோடங்கி முறைகள்**

நாட்டுப்புற மக்களின் வழிபாட்டு மரபுகளில் தெய்வங்கள் மனிதர்கள் மீது இறங்கி அருள்வாக்குச் சொல்வதாக நம்புகின்றனர். “கோ“ என்ற சொல்லிற்குத் தெய்வம் என்றுபொருள் ஆகும். அந்தக் கோவாகிய தெய்வத்தைத் தாங்கி நிற்பவர் கோடாங்கி எனப்படுகிறார். அவரே சாமி இறங்கி ஆடுபவராகவும், அருள்வாக்குச் சொல்பவராகவும் இருப்பதனால் சாமியாடி என்றும், அருள் சொல்வதால் அருளாளி என்றும், தெய்வமாக மறுஉருவம் கொள்வதால் அருளாளி என்றும்அழைக்கப்படுகின்றார். “எல்லாத் தெய்வங்களுக்கும் கோடாங்கிகள் உள்ளனர். கருவறையில் உள்ள அய்யன் தமக்குரிய கோடாங்கி மட்டும் அய்யன் பிடிக்கி என அழைக்கப்படுகின்றார். அவரே தலைமைக் கோடாங்கியுமாவார். அவரது அருள்வாக்குப் பெற்றே, கோவில் திருவிழாக்கள் ஏற்பாடு

செய்யப்படுகின்றன. இவ்வய்யன் பிடிக்கிகள் வெள்ளைக்கல் வைத்த கடுக்கன் அணிந்திருப்பர். இதர கோடாங்கிகள் பச்சைக்கல் அணிந்த ஒட்டுக் கடுக்கன் அணிந்திருப்பர்". கோடாங்கி என்பவர் சிறு தெய்வங்களின் அருள் உணர்வு வெளிப்படும் தெய்வ சக்தியுடையவராகவே கருப்படுகிறார். பிரமலைக்கள்ளர் சமூகத்தில் இந்நிகழ்வு சிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.

**வழிபாட்டு மரபுகள்**

பெட்டி தூக்குதல், சக்தி கிடாய் வெட்டுதல், பள்ளயம் பிரித்துப் கோயில்களுக்கும் அடிப்படை வழிபாட்டு நடைமுறைகள் உள்ளன.

**பெட்டி தூக்குதல் முறை**

"நமது முன்னோர்கள் இறந்து போனால் அவர்களின் பிணங்களை நாம் புதைத்தோ அல்லது எரித்தோ விடுகின்றோம். ஆனால் அவர்களது ஞாபகார்த்தமாக அவர்கள் பயன்படுத்திய பொருட்களை ஒரு பெட்டியினுள் வைத்துப் பாதுகாத்து அதை வருடத்திற்கு ஒருமுறை எடுத்து, அதற்குரிய மரியாதையைச் செய்து வழிபடுகிறோம். இவ்வாறு வழிபடுதலே பெட்டி தூக்குதல் எனப்படுகிறது". கள்ளர்களது திருவிழாக்களில் பெட்டி தூக்குதலே பிரதான நிகழ்வாகக் கருதப்படுகின்றது. இவ்வகையில் முன்னோர்களது உடைமைகளைப் பெட்டியில் வைத்து வழிபடுகின்ற முறை யூதர்கள் மத்தியில் வழக்கில் இருந்ததாக நம்ப முடிகிறது. "பண்டைய தமிழகத்தில் சிறுதெய்வ வழிபாடும் நடைபெற்றது. உற்பாதங்களிலும், தீய கனவுகளிலும் பறவை நிமித்தத்திலும் குறிகளைக் கண்டனர்"4 என்ற கருத்து நோக்கத்தக்கது.

**சக்தி நிறுத்துதல்**

கிடாயை வெட்டி இரத்தத்தைச் சிந்துவதன் மூலம் தெய்வத்தின் மீது அந்த ரத்தம் சிந்தப்பட்ட இடத்தில் நிலைத்துவிடுவதாக நம்புகின்றனர். அதாவது ஒரு இடத்தில் தெய்வம் நிலைபெற வேண்டுமென்றால் உயிர்ப்பலி மூலமாகத் தான், அதனை செய்ய இயலும் எனவும், உயிர்ப் பலியிடும் பொழுது ஏற்படுகின்ற இரத்தத்தைத் தெய்வங்கள் வந்து பருகிச் செல்லும் என நம்புகின்றனர்.

**பள்ளையம் வைத்தல்**

பச்சைப்பயிர் மற்றும்இதர பயிர்களைக் கம்புமாவில் கலந்து மா, சக்கரை, வாழைப்பழம் போன்றவற்றை ஒரு இலையில் அம்மாளுக்கு முன் வைத்துப் பூஜை செய்வதையே பள்ளயம் வைத்தல் என்கின்றனர். அக்காலத்தில் கிராமக் கோயில்களுக்குப் கட்டடங்கள் கட்டுகின்ற வழக்கம் கிடையாது. அவை பெரும்பாலும் காட்டுப் பகுதிகளில் வெட்ட வெளிகளிலேயே உள்ளன. அவற்றில் சாமிகளுக்கு நிரந்தரமான சிலைகள் வைக்கப்படுவதில்லை. சாமிகளுக்கு அடையாளமாகக் கல் தூண்கள் மட்டும் வைக்கப்பட்டிருக்கும். திருவிழாக் காலங்களில் மட்டும், மண்ணில் செய்த வைப்பர். அச்சிலைகளின் முன்பாக இப்படையல்களை வைக்கும் பொழுது காற்று அடித்து அவற்றை கவிழ்த்துவிடும். அதனால் கையினால் சிறிய பள்ளங்களைப் பற்றிய படையல்கள் எல்லாவற்றையும் அவற்றின் மீது வைப்பர். அவ்வாறு பள்ளங்களைப் பறித்து வைக்கின்ற படையல்கள் பள்ளயங்கள் எனப்பட்டன. பூஜைகள் முடிவடைந்த பின்பு அப்பள்ளயங்களை அச்சாமிக்குரிய கோடாங்கிகளுக்கோ அல்லது அதற்குரிய உரிமைக்காரர்களுக்கோ கொடுத்து விடுவர். பள்ளையம் என்ற சொல்லிற்கு வேறு ஒரு பொருளும் சொல்லப்படுகின்றது. பல பொருட்களைச் சாமிக்குப் படைப்பதனால் பல இயம் எனப்பட்டது. அச்சொல்லே பள்ளயம் என்று அழைக்கப்படுகிறது என்னும் கருத்தைச் சிலர் முன்வைக்கின்றனர். இவ்வாறு பள்ளயம் பிரித்து. பெரிய பூசாரி வாயில் துணி சின்னக் கருப்புசாமி, ராக்கம்மாள் நீங்கலாக

எல்லாத் தெய்வங்களுக்கும் பூசை செய்வார். அதுபோல் சின்னச்சாமி கருப்புக்கு மட்டும் சின்னபூசாரி பூசை செய்வார்.

**முடிவுரை**

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழிக்கு ஏற்ப பிரமலைக்கள்ளர்கள் வாழுகின்ற கிராமங்களில் தெய்வங்களுக்கு கோயில் அமைத்துள்ளனர்.கோயில்களில் தங்களுடைய முன்னோர்களையே தெய்வங்களாக வழிபட்டுள்ளனர். முன்னோர்களே தங்களை நோய் நொடியின்றி வாழச் செய்வதாக நம்பிக்கை வைத்துள்ளனர்.தெய்வங்கள் பூஜைகள் செய்யக்கூடிய கோடங்கியின் உடலுக்குள் வந்து மக்கள் குறை தீர்க்கும் பூஜை முறைகள் பற்றிக் கூறுவதாக அமைகின்றது.

**நூற்பட்டியல்**

[1] சுந்தர வந்தியத்தேவன், இரா. *பிரமலைக்கள்ளர் வாழ்வும் வரலாறும்*. சந்தியா பதிப்பகம். சென்னை 600 083, 2017.

[2] பிள்ளை, கே.கே. *தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்*. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113, 2018.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.